Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 009 | வியாழக்கிழமை Thursday | 09.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தமிழ்நாட்டில் போதைப்பொருள் கலாச்சாரம் அதிகரித்ததே அதிமுக ஆட்சியில்தான்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு



கடலூர்:

எடப்பாடிபழனிசாமி தலைமையிலான ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் போதைப்பொருள் கலாச்சாரம் அதிகரித்து விட்டதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குற்றம்சாட்டினார்.

தமிழக சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 23-ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், அனைத்து கட்சிகளும் தேர்தல் பரப்புரையில் தீவிரம் காட்டி வருகின்றன. குறிப்பாக, கடலூர் மஞ்சக்குப்பம் மைதானம் பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கலந்துகொண்டு கூட்டணி கட்சிவேட்பாளர்களை ஆதரித்து பரப்புரை செய்தார்.

பொதுக்கூட்டத்தில் அவர் பேசுகையில், "தமிழகத்தில் 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் நிர்வாகமும், நிதி நிலைமையும் சீரழிக்கப்பட்டு கிடந்தது. அதனை கொஞ்சம் கொஞ்சமாக திமுக அரசுதான் சரி செய்தது. அந்த மோசமான நிதி நிலைமையிலும் தமிழகத்தை 11 சதவீத பொருளாதார வளர்ச்சி அடைய செய்ததுதான் திமுக அரசின் சாதனை.

தமிழ்நாட்டில் அதிமுக ஆட்சியில்தான் போதைப் பொருள் கலாச்சாரம் அதிகரித்தது. தமிழகத்தில் தொழில் தொடங்க வந்த பல நிறுவனங்கள், அனைத்தும் வெளிமாநிலங்களை தேடி ஓடிவிட்டன. தமிழகத்தில் போதைப்பொருள் கலாச்சாரம் அதிமுக ஆட்சியில்தான் அதிகரித்தது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக வெற்றி பெற்று ஆட்சி பொறுப்பேற்ற முதல் நாளிலேயே மகளிர் விடியல் பேருந்துக்கு கையெழுத்து போட்டவன் நான். இப்போது தமிழகத்தை பின்பற்றி மற்ற மாநிலங்களிலும் மகளிருக்கு கட்டணம் இல்லா பேருந்து திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

சொன்னதை செய்வோம்

2016 சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதியில் வயதானவர்களுக்கு இலவச பேருந்து பயணத்திட்டம் வழங்கப்படும் என்று அதிமுக கூறியது. ஆனால், ஆட்சிக்கு வந்ததும் அந்த திட்டத்தை அவர்கள் செயல்படுத்தவில்லை. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் திராணி திமுகவிடம் மட்டுமே உள்ளது. அதிமுக - பாஜக கூட்டணி ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளுக்கான இலவச மின்சாரம் திட்டம் நிறுத்தம் செய்யப்படும். தமிழை அழிப்பதற்கான மும்மொழி கொள்கை அமல்படுத்தப்படும்.

மாநில அரசை மக்கள் தேர்ந்தெடுப்பதை தடுப்பதற்காகவே 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தை கொண்டு வர பாஜக முயற்சிக்கிறது. மேலும், தமிழகத்தின் பிரதிநிதித்துவத்தையும், அதிகாரத்தையும் குறைக்கும் வகையில் தொகுதி மறுசீரமைப்பு திட்டத்தையும் பாஜக கையில் எடுத்துள்ளது. இது போன்ற பல்வேறு திட்டங்களை கையில் வைத்திருக்கும் பாஜகவின் முயற்சிகளை முறியடிக்கும் அரசாக திமுக அரசு உள்ளது.

திமுக ஆட்சியில் கடலூர் மாவட்டத்தில் கொண்டுவரப்பட்ட இடங்களை முதல்வர் ஸ்டாலின் பட்டியலிட்டார். அவை பின்வருமாறு:

சிதம்பரம் புதிய பேருந்து நிலையம்

சுற்றுலா மைய மேம்பாட்டு பணிகள்

கெடிலம் ஆற்றுக்கு மேல் உயிர் உயர்மட்ட பாலம்

சிதம்பரம் கூட்டு குடிநீர் திட்டம்

அரிவாள் மூக்கு பகுதியில் வெள்ள நீர் கடலில் கலப்பதை தடுக்க புதிய கால்வாய்

குறிஞ்சிப்பாடியில் பெருமாள் ஏரி தூர்வாரம் பணி

திட்டக்குடியில் புதிய கால்நடைதீவனஆலை

# குப்பைக்கும் வரிப்போட்ட ஒரே அரசு திமுக அரசு தான்; சென்னையில் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம்



சென்னை: நாட்டில் குப்பைக்கும் வரிப்போட்ட ஒரேஅரசுதிமுக அரசு தான் என்று அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடுமையாக விமர்சித்தார்.

சென்னை சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் அதிமுக கூட்டணியில் அமமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் செந்தமிழனை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர், "சைதாப்பேட்டை வேட்பாளர் செந்தமிழன் வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் எனது இனிய நண்பர். தொகுதி மக்களுக்கு நல்லது செய்யக் கூடிய பண்பு படைத்தவர் செந்தமிழன். அவருக்கு குக்கர் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். மு.க.ஸ்டாலின் வேண்டுமென்றே தவறான அவதூறு பிரச்சாரத்தை செய்து வருகிறார். அதிமுக கூட்டணி இயற்கையான கூட்டணி. திமுக அரசை கடந்த நான்கரை ஆண்டுகளாக கூட்டணி கட்சியினர் தாங்கிப் பிடித்துள்ளனர். சட்டமன்றத்தில்திமுகசெய்த தவறை அவர்கள் சுட்டிக்காட்டியது இல்லை.

திமுக கூட்டணியில் கூட்டணி கட்சியினருக்கு குறைவான சட்டமன்றத் தொகுதிகளை திமுக ஒதுக்கியுள்ளது. ஆனால் அதிமுக அவ்வாறு கிடையாது; அதிமுக வேட்பாளரைக் காட்டிலும் அதிமுக கூட்டணி வேட்பாளரை வெற்றி பெற செய்ய 10 மடங்கு உழைப்போம். காங்கிரஸும், திமுகவும் கூட்டணி அமைக்க 20 நாட்கள் போராடினார். அவர்கள் கூட்டணியில் கருத்து வேறுபாடு இருப்பது வெளிப்படையாக தெரிய வந்தது. அவர்கள் மனமுவந்து கூட்டணியில் சேரவில்லை. மனவருத்தத்துடன் கூட்டணியில் இணைந்துள்ளனர்.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கடுமையாக விலைவாசி உயர்வு ஏற்பட்டுள்ளது. விலைவாசி உயர்வால் பொதுமக்கள் போராட்டமான வாழ்விற்கு தள்ளப்பட்டுள்ளனர். சட்டம்-ஒழுங்குதரம் கெட்டுள்ளது. சிறுமிகள், முதியோர்கள், பெண்களுக்கு தமிழ்நாட்டில் பாதுகாப்பு இல்லை. திமுகவை பொறுத்தவரை குற்றவாளிகளைக் காப்பாற்றுவதுதான் அவர்களது எண்ணம். அண்ணா பல்கலைக்கழகத்தில் பாதிக்கப்பட்ட மாணவிக்கு அதிமுக ஆட்சிக்கு வந்தால் யார் அந்த சார்? என்பதை நிச்சயம் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்.

அதிமுக ஆட்சியில் சென்னை மாநகரத்தில், ஜய்கா உதவியுடன் வடிகால் வசதிகள் செய்து தரப்பட்டது. இதில் 1040 கிலோமீட்டர் தொலைவிற்கு வடிகால் வசதிகள் செய்து தரப்பட்டது. ஆக்கிவைத்த சாப்பாட்டை சாப்பிடுவது போல், திமுக, அதிமுக திட்டங்களை நிறைவேற்றுகிறது. மழைநீர் வடிகால் பணிகள் 98 சதவிகிதம் முடிந்துள்ளதாக மாநகராட்சி மேயரும், மழை பெய்தால் ஒரு சொட்டு மழைநீர்கூட தேங்காது என்று அமைச்சர் மா. சுப்பிரமணியமும் கூறுகின்றனர். அத்தனையும் பொய்.

கமிஷனுக்காக இந்த அரசு திட்டமிட்டு வடிகால் பணிகளை ஆமை வேகத்தில் நடத்தினர். இதனால்மக்கள்பாதிக்கப்பட்டுள்ளனர். தரமான வடிகால் வசதிகள் செய்து தரப்படவில்லை. அதிமுகஆட்சியில்வடிகால் பணிகளில் முதலீடு செய்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதிமுக ஆட்சிக்கு வந்தால் சென்னை கூவம் ஆற்றங்கரை ஓரத்தில் உள்ள 17,750 குடும்பங்கள், பாதுகாப்பான இடத்திற்கு குடியமர்த்தப்படுவர். சென்னையில்45கிலோமீட்டர் தூரத்திற்கு தூர்வாரப்படாமல் இருந்த கால்வாய்கள் அதிமுகஆட்சியில்தூர்வாரப்பட்டது. சென்னையில் பெய்யும் மழைநீர் காலவாய்களில்முழுவதுமாகவடியும் சூழலை உருவாக்கியது அதிமுக ஆட்சி.

சைதாப்பேட்டையில் அரசு ஊழியர்களுக்கான வாடகை குடியிருப்புகள் கட்டப்பட்டு இதுவரை அவர்கள் குடியம ர்த்தப்படவில்லை. திமுக வெளியிட்டுள்ள அறிவிப்புகளில் நான்கில் ஒரு பங்கைத்தான் நிறைவேற்றி உள்ளனர். கல்விக்கடன்ரத்துசெய்யப்படவில்லை; கேஸ் மானியம் வழங்கப்படவில்லை; பெட்ரோல், டீசல் விலை குறைக்கவில்லை; ரேஷன் கடைகளில் கூடுதலாக சர்க்கரை ஒரு கிலோ தருவதாகக் கூறினர். அவ்வளவு மோசமான கீழ் தரமான ஆட்சி தமிழ்நாட்டில் பார்க்க முடிகிறது.

எங்கு பார்த்தாலும் கஞ்சா விற்பனை; கஞ்சா விற்பவர்களுக்குதுணை நிற்கிறது திமுக அரசு. அதிமுக ஆட்சிக்கு வந்த பின் மூன்றே வாரத்தில் நகரம் முதல் கிராமம் வரை கஞ்சா அறவே ஒழிக்கப்படும். திமுக ஆட்சியில் அனைத்திற்கும் வரி உயர்த்தப்பட்டுள்ளது. நாட்டில் குப்பைக்கும் வரிப்போட்ட ஒரே அரசு திமுக அரசு தான். கழிப்பிட பராமரிப்புக்கான டெண்டர் விடப்பட்டதில், அதிலும் கூட கமிஷன் அடித்த ஒரே கட்சி திமுக. கருணாநிதியின் குடும்ப அரசியல், வாரிசு அரசியல் நாட்டிற்கு தேவையா?, வரும் தேர்தலில் குடும்ப ஆட்சிக்கும்,வாரிசு அரசியலுக்கும் முற்றுப்புள்ளி வைப்பீர்களா? மக்களைக் காப்போம்,தமிழ்நாட்டை மீட்போம்" என்று எடப்பாடி பழனிசாமி பேசினார்.

**வரி விளம்பரங்கள்**

தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் / ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# ஜெட் வேகத்தில் உயர்ந்த தங்கம் விலை: சவரனுக்கு ரூ. 2,720 அதிகரிப்பு



சென்னை: 22 காரட் தங்கம் விலை (ஏப்.8) ரூ.2,720 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,13,600-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் போர் தொடுத்திருப்பதன் காரணமாக தங்கத்தின் விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டது. அதுவரையில் கடுமையாக உயரந்து வந்த தங்கத்தின் விலை, இந்த போர் தொடங்கியதும் அப்படியே குறைய தொடங்கியது. பொதுவாக, இதுபோல போர் சூழல் ஏற்பட்டால் தங்கத்தின் விலை அதிகரிக்கவே செய்யும். ஆனால், மேற்காசிய போர் இதனை தலைகீழாக மாற்றியது.

இதற்கு காரணம் கச்சா எண்ணெய் விலை உயர்வுதான். போரின் விளைவாகஹார்மூஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் கச்சா எண்ணெய் விலை பல மடங்கு உயர்ந்தது. இதனால் தங்கத்தின் மீதான தங்கள் முதலீட்டை திரும்பப் பெற்ற முதலீட்டாளர்கள், அதனை கச்சா எண்ணெய்யில் முதலீடு செய்தனர். இதுவே தங்கம் விலை குறைய காரணமாக இருந்தது. தற்போது ஈரான் - இஸ்ரேல் போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதன் விளைவாக, தங்கத்தின் மீண்டும் முதலீடு அதிகரிக்க தொடங்கியுள்ளது. மேலும், கச்சா எண்ணெய் விலை சுமார் 14 டாலர்கள் குறைந்து, 95 டாலர்களாக வர்த்தகம் ஆகிறது. இந்த கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியே, தற்போது தங்கம் விலையில் பிரதிபலித்துள்ளது. இதன் காரணமாக இன்று தங்கம் விலை ஜெட் வேகத்தில் உயர்ந்துள்ளது. (ஏப்ரல் 7) ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,040 உயர்ந்து ரூ.1,10,880-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதே போல், கிராமுக்கு ரூ.130 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,860-க்கு விற்பனை செய்யப்பட்டது. இன்று (ஏப்.8) சவரனுக்கு ரூ.2,720 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,13,600-க்கு விற்பனைசெய்யப்படுகிறது. மேலும், கிராமுக்கு ரூ.340 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.14,200-க்கு விற்பனைசெய்யப்படுகிறது. வெள்ளி விலைதங்கம்விலைபோல்வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. (ஏப்.8) கிராமுக்கு ரூ.10 அதிகரித்துள்ளது. நேற்று கிராமுக்கும் ரூ.5 குறைந்து, ஒரு கிராம் ரூ.255-க்கும், ஒரு கிலோ ரூ.5,000 குறைந்து ரூ.2,55,000 விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிராம் ரூ.265-க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.2,65,000-க்கும் விற்பனைசெய்யப்படுகிறது.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் தமிழரசி



சிவகங்கை மாவட்டம் 2026 ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறும் தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, மானாமதுரை (தனி)சட்டமன்றதொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் திமுக வேட்பாளர்தமிழரசிரவிக்குமார் அவர்கள் ஏப்ரல் 7ஆம் தேதி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இதில் மானாமதுரை கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட மேலநெட்டூர், நாட்டார்குடியிருப்பு, மணக்குடி, காக்குடி, தேவரேந்தல், ஆலம்பச்சேரி, கோவனூர், கீழ புதுக்கோட்டை, தெ. புதுக்கோட்டை, தெ. புதுக்கோட்டைஆதி.தி.கு, ஆலங்குளம், நல்லாண்டிபுரம், வண்ணான்ஓடை, தெற்கு சந்தனூர், டி.நெடுங்குளம், இந்திராநகர் பள்ளமிட்டான், தெ.சந்தனூர் குடியிருப்பு, இளையநாயக்கன், பூக்குளம், நெடுங்குளம், வேதியரேந்தல் ஆதி.கு,வேதியரேந்தல், செங்கோட்டை, வன்னிக்குடி, எம்.கரிசல்குளம், சங்கமங்கலம்,கீழப்பசலை,கீழப்பசலை சி.பி.ஐ.அ, கீழப்பசலை, சீனியப்பாநகர், ஆனூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வாக்காளர் பெருமக்களை நேரில் சந்தித்த தமிழரசிஅவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், அதனால் பொதுமக்கள் அடைந்த பயன்களையும் எடுத்துக்கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வாக்காளர் பெருமக்களை கேட்டுக் கொண்டார்.

வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் வேட்பாளர் தமிழரசி அவர்களுக்கு மானாமதுரை கிழக்கு ஒன்றிய வாக்காளர் பெருமக்கள் அமோக வரவேற்பு அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மானாமதுரை கிழக்கு ஒன்றியத்தை சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளான திமுக, காங்கிரஸ், விசிக, தேமுதிக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தமிழர் தேசம், எஸ்டிபிஐ, முக்குலத்தோர் புலிப்படை, மநீம, மதிமுக, தமிழ் புலிகள் கட்சி, மக்கள் விடுதலைக் கட்சி, மமக உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



## மானாமதுரை நகர் பகுதியில் தமிழரசி ரவிக்குமார் தேர்தல் பரப்புரை

சிவகங்கை மாவட்டம் 2026 ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறும் தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, மானாமதுரை (தனி)சட்டமன்றதொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் திமுக வேட்பாளர்தமிழரசிரவிக்குமார் அவர்கள் ஏப்ரல் 8ஆம் தேதி புதன்கிழமையன்று மானாமதுரை நகர்ப்பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இதில் ரயில்வே காலனி பகுதி, பழைய பேருந்துநிலையம்,கேப்பர் பட்டிணம், கிருஷ்ணராஜபுரம், கொடிகால் தெரு, பாகபத்து அஹ்ரஹாரம், பெருமாள் கோவில்தெரு சோநாதபுரம் - அக்ரஹாரம் - ஆனந்தபுரம் பையாஸ், அண்ணாசிலை, காட்டு உடைகுளம், சாஸ்தா நகர், அண்ணாமலை நகர், அன்புநகர், பட்டதரசி, சிவகங்கை சாலை, புதுத்தெரு, செட்டியார் தெரு, சிஎஸ்ஐ தெரு, நல்ல தம்பிபிள்ளை தெரு, மாரியம்மன் கோவில் தெரு,நாகலிங்கம் நகர், குண்டுராயர் தெரு,சுந்தரபுரம் அஹ்ரஹாரம், பழைய தபால் ஆபீஸ் தெரு, பட்டறை பிருந்தாவனம் தெரு, குலாலர் தெரு, அழகர் கோவில் தெரு, கண்ணார் தெரு உள்ளிட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வாக்காளர் பெருமக்களை நேரில் சந்தித்து தமிழரசி அவர்கள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

நடைபெற்ற இந்த தேர்தல் பரப்புரையின்போது வாக்காளர் பெருமக்கள் தமிழரசி அவர்களுக்கு ஆரத்தி எடுத்தும், ஜூஸ் வழங்கியும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வரவேற்றனர். தமிழரசி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தின் நகர கழக செயலாளர் பொன்னுசாமி மற்றும் நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி ஆகியோர் வாக்காளர் பெருமக்களிடம் தமிழரசி அவர்கள் மாபெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய கடந்த ஐந்து ஆண்டுகளில் அவர் நிறைவேற்றிய திட்டப்பணிகளை எடுத்துக்கூறி வாக்கு சேகரித்தனர்.

இந்நிகழ்வில் மானாமதுரை நகர் பகுதியில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளானதிமுக,காங்கிரஸ், விசிக, தேமுதிக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்,திராவிடர் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தமிழர் தேசம், எஸ்டிபிஐ, முக்குலத்தோர் புலிப்படை, மநீம, மதிமுக, தமிழ் புலிகள் கட்சி,மக்கள் விடுதலைக் கட்சி, மமக உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



கேரளாவில்இடிக்கிமாவட்டம்தேவிகுளம்சட்டமன்ற இடதுசாரிகம்யூனிஸ்ட்டுவேட்பாளர்ராஜாவைஆதரித்து இந்தியகம்யூனிஸ்ட்டுதேசியபொதுசெயலாளர்திருடிரா ஜாமூணார்வருகைதந்துபொதுக்கூட்டத்தில்பேசினார்அ தனைதொடர்ந்துமூணார்ஏஐடியுசிஆபிஸில்தோழர்மணி சிபிஐதேசியசெயலாளர்தோழர்டிராஜாவைவரவேட்டார்

## மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றி கழக வேட்பாளர் எழில். கேத்தர் பிரச்சாரம் தொடங்கினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதி த.வெ.க.சார்பில் விசில் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் எழில். கேத்தரின் எழில்மலை தந்தை தலித் எழில்மலை நினைவிடத்தில் மாலை அணிவித்தார் அதனைத் தொடர்ந்து குலதெய்வம் கங்கை அம்மன் கோவிலில் சிறப்பு பூஜைகள் மேற்கொண்டார். பின்பு இரும்பேடு பேருந்து நிறுத்தத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினார். பின்பு மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்துக்குட்பட்ட இரும்பேடு நென்மேலி நல்லூர் வாழைப்பட்டு தேவனூர் உள்ளிட்ட பகுதிகளில் கிராம பொதுமக்களை நேரில் சந்தித்து துண்டு பிரசுரம் வழங்கி விசில் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார். அங்கு இருந்தகிராமபொதுமக்கள் எழில் கேத்ரின் எழில் மலையை ஆரத்தி எடுத்து வரவேற்றனர். அப்போது மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ். பாலாஜி, ஷீபா, மாவட்ட மகளிர் அணி நிர்வாகி சுமதி சாமிக்கண்ணு, சபரி, ராஜேஷ், தரணிதரன், கரன், உள்ளிட்ட த.வெ.க.நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## மதுரை திருமங்கலத்தில் தொடர்ந்து மூன்றாவது முறையாக போட்டியிடும் முன்னாள் அமைச்சர் R.B. உதயகுமார் தீவிர வாக்கு சேகரிப்பு

மதுரை திருமங்கலம் பகுதியில் உள்ள வடகரை வடகரை புதூர் மேலக்கோட்டை கீழக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள கிராம மக்களை சந்தித்து தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார் தொடர்ந்து மூன்றாவது முறையாக திருமங்கலம் சட்டமன்ற தொகுதிக்கு போட்டியிடும் முன்னால் அமைச்சர் R.B உதயக்குமார் எடப்பாடி பழனிச்சாமியின்தேர்தல்அறிக்கைகளை கூறும் ஆட்சிக்கு வந்தால் நாங்கள் பத்தாயிரம் ரூபாய் உடனடியாக வழங்குவோம் என்றும் மேலும் ஏற்கனவே செய்த நலத்திட்டங்களை எடுத்துரைக்கும் பெண்கள் மற்றும் பொதுமக்களை மத்தியில் வாக்குகளை சேகரித்தார் R.B.உதயகுமாரின் மகள் பிரியதர்ஷினி மற்றும் கட்சி நிர்வாகிகள் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்கும் படி பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தனர்



## தென்காசியில் (9ம் தேதி) சமரச தின விழிப்புணர்வு பேரணி முதன்மை மாவட்ட நீதிபதி பி.ராஜவேல் தொடங்கி வைக்கிறார்



தென்காசியில் நாளை (9ம் தேதி) சமரச தின விழிப்புணர்வு பேரணி நடைபெற உள்ளது.இந்த பேரணியை தென்காசி முதன்மை மாவட்ட நீதிபதி பி.ராஜவேல் தொடங்கி வைக்கிறார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின், தமிழ்நாடு சமரச மற்றும் இணக்க மையத்தின் இயக்குநரின் வழிகாட்டுதலின்படி, தென்காசி மாவட்ட சமரச மையம் சார்பில் நாளை (9ம் தேதி) சமரச தினம் கொண்டாடப்படுகிறது. அன்று காலை 9 மணிக்கு தென்காசி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடத்தில் சமரசம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வு பேரணி மற்றும் துண்டுப் பிரசுரங்களை வினியோகித்து சமரச தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த விழிப்புணர்வு பேரணி தென்காசி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடத்தில் தொடங்கி, அரசு போக்குவரத்து கழகபணிமனை அருகே நிறைவு பெறுகிறது. இப்பேரணிக்கு தென்காசி முதன்மை மாவட்ட நீதிபதி பிராஜவேல் தலைமை தாங்கி பேரணியை தொடங்கி வைக்கிறார்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் நீதிபதிகள். தென்காசி வழக்கறிஞர் சங்க மற்றும் தென்காசி பார் அசோசியேஷன் நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள், சட்டக் கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொள்கின்றனர்.

## ஏற்காடு அருகே தேர்தல் புறக்கணிப்பு சுடுகாடு வசதி கோரி ஆர்ப்பாட்டம்

சேலம் மாவட்டம் ஏற்காடு ஊராட்சி செம்மநத்தம் பஞ்சாயத்து செங்கலத்துப்பாடி கிராமத்தில் பொது சுடுகாடு வசதி கோரி அரசை கண்டித்து கிராமமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செங்கலத்துப்பாடி கிராமத்தில் 500க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்ற பல ஆண்டுகளாக சுடுகாடு வசதி இல்லாமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர் இதனால் இயற்கை மரணம் ஏற்பட்டால் உடல்களை அடக்கம்செய்ய முடியாமல் மாற்று கிராமங்களுக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை உருவாகி அங்கும் எதிப்பு ஏற்படுவதாக மக்கள் தெரிவித்தனர் இது குறித்து 5 ஆண்டுகளாக மாவட்ட நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் மனுக்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கபடாததால் ஆத்திரம் அடைந்த பொது மக்கள் வருகின்ற சட்டமன்ற தேர்தலைமுழுமையாகபுறகணிப்பதாகஅறிவித்தனர் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது அதனை பொது சுடுகாடு அமைத்து தரவேண்டி ஊர் பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இடுபட்டனர்

## வேப்பூரில் தேர்தல் பணிமனையை திறந்து வைத்து தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்ட த.வெ.க வேட்பாளர்

நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, கடலூர் மாவட்டம் விருத்தாசலம் தொகுதியில் போட்டியிடும் தமிழக வெற்றிக் கழக (தவெக) வேட்பாளர் விஜய் வேப்பூரில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். முன்னதாக, வேப்பூரில் கட்சியின் தேர்தல் பிரச்சாரப் பணிமனையைத் திறந்து வைத்த அவர், பொதுமக்களிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

பின்னர், வேப்பூர் கடை வீதி மற்றும் முக்கிய வீதிகளில் நடந்து சென்று, தமது கட்சியின் 'விசில்' சின்னத்திற்கு தீவிரமாக வாக்குச் சேகரித்தார். அப்போது,சாலையோரத்திலிருந்த தர்பூசணி கடை ஒன்றில், பொதுமக்களுக்கு தர்பூசணி பழங்களை வெட்டிக் கொடுத்து அவர் ஆதரவு திரட்டியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. அதனைத் தொடர்ந்து, சாலையோரக் கடைகள் மற்றும் வணிக வளாகங்களுக்குத் தனது ஆதரவாளர்களுடன் சென்று பொதுமக்களிடம் வாக்குக் கோரினார். தற்போது கடும் போட்டி நிலவி வரும் சூழலில், தமிழகவெற்றிக்கழகத்தினர் விசில் சின்னத்திற்கு வீதி வீதியாகச் சென்று தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த தேர்தல் பிரச்சார நிகழ்வில், கட்சியின் நல்லூர் ஒன்றியச் செயலாளர் செல்வமணி, நல்லூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் ரஞ்சித், இளைஞரணி நிர்வாகிகள் ராதாகிருஷ்ணன், வேப்பூர் ராம்குமார், மருத்துவ அணி சீனிவாசன் உள்ளிட்ட த.வெ.க-வின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும் திரளாகக் கலந்துகொண்டனர். முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த வேட்பாளரிடம் ஏப்ரல் 9 தேதி கடலூர் மாவட்டத்திற்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு வரும் தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் அவர்கள் விருத்தாச்சலம் மற்றும் திட்டக்குடி தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்வாரா எனது கேட்டதுக்கு கண்டிப்பாக மாலை 5 மணி அளவில் தொழுதூர் பகுதியில் தலைவர் பிரச்சாரம் மேற்கொள்கிறார். சிறியவர் முதல் பெரியவர் வரை குடும்பமாக வாக்களிக்கதயாராக இருக்கின்றனர் எனவும் கண்டிப்பாக நாங்கள் வெற்றி பெறுவோம் எனவும் கூறினார்.



## தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரம்



தேனி தெற்கு ஒன்றியம்உட்பட்டஸ்ரீரங்கபுரம், வெங்கடாசலபுரம், கோவிந்தநகரம், சோலைத்தேவன்பட்டி ஆகிய பகுதிகளில் தமிழகமுன்னாள் முதல்வர், போடிநாயக்கனூர் சட்டமன்றதொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் ஓ. பன்னீர்செல்வம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். உடன் திமுக தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் தமிழக அரசின் ஐந்து ஆண்டு கால சாதனைகளை விவசாயிகள் பெண்களுக்கான பள்ளி மற்றும்கல்லூரி மாணவ மாணவிகள் உதவித்தொகை இல்லத்தரசிகளுக்கு மாதம்தோறும் உதவித்தொகை ஊனமுற்றோர் மற்றும் இதர தரப்பு பெண்களுக்கான சிறப்புத்திட்டங்கள் முதல்வரின் காலை உணவு திட்டம் உங்கள் ஊரில் ஸ்டாலின் உங்கள் முதல்வர் திட்டம் சிறப்பு திட்டங்களை சாதனைகளை எடுத்துரைத்துஉதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் உடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவீந்திரநாத் திமுக மற்றும் கூட்டணி கட்சியைச் சார்ந்த ஒன்றிய செயலாளர் நகர செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

## ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை: ரிசர்வ் வங்கி அறிவிப்பு



ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளில் கச்சா எண்ணெய் விலை வரலாறு காணாதஅளவிற்கு உயர்ந்தது.இதனால் இறக்குமதி, ஏற்றுமதி பொருட்களின் விலைகளும் கணிசமாக உயர்ந்தன. இந்நிலையில், ஈரான் உடனான போரை இரண்டு வாரங்களுக்கு நிறுத்துவதாக இன்று (ஏப்ரல் 08) அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அதிரடியாகஅறிவித்துள்ளார்.இது உலகநாடுகளை சற்று நிம்மதியடைய செய்துள்ளது. அமெரிக்க அதிபரின் அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களிலேயே, கச்சா எண்ணெய் விலை 20% சரிந்துள்ளது. 119 டாலராக இருந்த ஒரு பீப்பாய் ப்ரெண்ட் கச்சா எண்ணெய் விலை தற்போது 100 டாலருக்கு கீழ் சரிந்துள்ளது.

அதேபோல், கடந்த சில நாட்களாக சரிந்து வந்த இந்திய பங்குச்சந்தைகள், இன்று (ஏப்ரல் 08) காலை ஏற்றத்துடன் வர்த்தகத்தைத் தொடங்கியுள்ளது. இதனால் பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் நிம்மதி பெருமூச்சுவிட்டுள்ளனர். கச்சா எண்ணெய் விலை சரிவால் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூபாய் 2,720 உயர்ந்துள்ளது. வெள்ளியின் விலை கிராமுக்கு ரூபாய் 10உயர்ந்துள்ளது.போர்நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 50 பைசா அதிகரித்து ரூபாய் 92.56 ஆக உயர்ந்துள்ளது.

# ஒன்றிய பிஜேபி அரசு தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நிதியில் ஓரவஞ்சனை செய்கிறது; கடையநல்லூர் தேர்தல் பிரச்சாரத்தில் வைகோ குற்றச்சாட்டு



இந்தியாவிலேயே அதிக அளவில் மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்த கூடிய அரசாக இன்றைய திமுக அரசு இருக்கிறது. ஆனால் ஒன்றிய பிஜேபி அரசு நமது மாநிலத்திற்கு விடுவிக்க வேண்டிய நிதியை முறையாக விடுவிக்கவில்லை எனவும் கடையநல்லூரில் நடந்த தேர்தல் பரப்புரையில் வைகோ பேசினார்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர், மதிமுக துணைபொதுச்செயலாளர். தி.மு. இராசேந்திரன், அவர்களை ஆதரித்து காயிதே மில்லத் திடலில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது: கடையநல்லூர் காயிதே மில்லத் திடலில் நான் பேசிகிற இந்த வேளையில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், இங்கு வந்து பேசியதை நினைவு கூறுகிறேன். அவ்வளவு வரலாற்று சிறப்புமிக்க ஊர் இந்த ஊர். இங்குள்ள விவசாயப் பகுதிகளில் காட்டுப் பன்றிகளின் அட்டகாசம், யானைகளின் அட்டகாசம் பெரிய அளவில் இருப்பதாகவும் இதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாகவும் இங்குள்ள சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் கிருஷ்ண முரளி அதை கண்டு கொள்ளவில்லை எனவும் குற்றம் சாட்டினார். மேலும் இந்த பகுதியில் உங்கள் வேட்பாளர் இராசேந்திரனை வெற்றி பெற வைத்தால் இவர் ஐந்து வருடங்கள் உங்களோடு தங்கி உங்களுக்கான தேவைகளை மிகவும் சிறப்பாக செய்பவர் என்பதற்கு நான் சான்றளிக்கிறேன். என கூறிய அவர் தேர்தல் பறக்கும் படையினர் முதலமைச்சர் ஸ்டாலின் வாகனத்தை பல்வேறு இடங்களில் சோதனை செய்வது போல் ஏன் இந்திய நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி வருகையின் போது அவரது வாகனத்தை சோதனை செய்யவில்லை, ஏன் கண்டுகொள்ளவில்லை, எனவும் பேசினார். உங்கள் வேட்பாளர் தி.மு. ராசேந்திரனுக்கு நீங்கள் அனைவரும் உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து அவரை அமோக வெற்றி பெற செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சியில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார், மாவட்டச் செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், ராம உதயசூரியன், சிபிஎம் கடையநல்லூர் தேர்தல் நிர்வாகி ராஜசேகர், மேலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



# தாராபுரம் மாரியம்மன் கோவில் திருவிழா

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தாராபுரம் மாரியம்மன் கோவில் திருவிழாக்களில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பூச்சட்டி, வெங்கலப் பூவோடு ஏந்தி அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துவது வழக்கம். மாசி, சித்திரை மாதங்களில் நடைபெறும் இவ்விழாக்களில் பெண்கள் குத்தாட்டம் போட்டு, தீர்த்த காவடி மற்றும் தீச்சட்டி எடுத்து அம்மனை வழிபடுகின்றனர்.

முக்கிய நிகழ்வுகள்

பூவோடு பூச்சட்டி எடுத்தல்: பக்தர்கள் பூச்சட்டி அல்லது வெங்கலப் பூவோடு ஏந்தி,

"ஓம் சக்தி பராசக்தி" என் முழக்கமிட்டு கோவிலை வலம் வந்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

பக்தர்கள் பங்கேற்பு தாராபுரம் மாரியம்மன் கோவில் திருவிழாவில் 10,000-க்கும் மேற்பட்டோர் கலந்துகொள்கின்றனர் நேர்த்திக்கடன்: தீச்சட்டி ஏந்தி வருதல், அலகு குத்துதல், காவடி எடுத்தல் போன்ற பல்வேறு சடங்குகளை பக்தர்கள் செய்கின்றனர்

2026-ஆம் ஆண்டின் திருவிழா கொண்டாட்டங்கள் ஏப்ரல் மாதத்தில் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன

# கோவை வி.ஜி. நிறுவனங்கள் மற்றும் வி.ஜி. மருத்துவமனை நிறுவனர் தினம் மற்றும் கல்லூரி தின விழா கொண்டாட்டம்

## கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு பதக்கம், சான்றிதழ் வழங்கினர்



ஏ வி எல் எஸ் டிரஸ்ட் அமைப்பின் கீழ் செயல்படும் கோவை வி ஜி மருத்துவமனை, வி ஜி நர்சிங் பள்ளி மற்றும் வி ஜி பாராமெடிக்கல் அறிவியல் நிறுவனம் ஆகியவை இணைந்து, தங்களது நிறுவனர் டாக்டர் வேணுகோபால கிருஷ்ணன் அவர்களை நினைவுகூரும் வகையில், நிறுவனர் தினம் மற்றும் கல்லூரி தின விழா கோவை IMA மண்டபத்தில் விமர்சையாக நடைபெற்றது.

இவ்விழாவின் முதன்மைவிருந்தினராக மகளிர் மருத்துவம் மற்றும் கருத்தரிப்பு சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற வுமன்ஸ் செண்டர் மருத்துவமனை நிறுவனத்தின் கிளினிக்கல் டைரக்டர் டாக்டர் மிருதுபாஷினி கோவிந்தராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நிகழ்ச்சி துவக்கமாக பிரார்த்தனை பாடலுடன் ஆரம்பித்து, டாக்டர் ரம்யா ஜெயராம் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து நிறுவனர் டாக்டர் வேணுகோபால கிருஷ்ணன் அவர்களுக்கு மலரஞ்சலி செலுத்தி, முக்கிய விருந்தினர்கள் மற்றும் நிர்வாகிகள் இணைந்து குத்துவிளக்கு ஏற்றி விழாவைத் தொடங்கினர்.

பின்னர், கல்லூரி முதல்வர் நவினிஸ்ரீ ஆண்டு அறிக்கையை வழங்கினார். அதன் பின் வி ஜி மருத்துவமனை தலைவர் டாக்டர் வி. வெங்கடேஷ் மற்றும் நிர்வாக அறங்காவலர் டாக்டர் ஆஷா வெங்கடேஷ் ஆகியோர் உரையாற்றினர். சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பாராட்டு விழாவும் நடைபெற்றது.

விழாவின் ஒரு பகுதியாக, கல்வியில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டதுடன், பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு உதவித்தொகைகள் வழங்கப்பட்டன.

முதன்மை விருந்தினர் தனது சிறப்பு உரையை வழங்கி, கல்வி மற்றும் துணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

இந்த விழாவில் வுமன்ஸ்செண்டர்மருத்துவமனை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் கே. எஸ். கோவிந்தராஜன், டாக்டர் விஷ்ணுகுமார் வெங்கடேஷ் மற்றும் ஜெயராம் கோவிந்தராஜன் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நபர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விழா, நிறுவனத்தின் சிறப்புமிக்க சாதனைகள், ஒற்றுமை மற்றும் அதன் வளர்ச்சியை கொண்டாடும் நோக்கில், நிர்வாகம், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்ட நிகழ்வாக அமைந்தது. நிகழ்ச்சியின் முடிவில் டாக்டர் நந்தினி வெங்கடேஷ் நன்றி உரையாற்றினார். தொடர்ந்து வி ஜி நிறுவன மாணவர்கள் வழங்கிய பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# தேனி மாவட்டம் - கேரள சட்டமன்ற தேர்தல் - திண்டுக்கல் சரக காவல்துறை துணை தலைவர் எல்லைச் சோதனைச்சாவடியில் ஆய்வு செய்தார்



கேரள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, திரு.V.சசிமோகன், IPS. DIG, திண்டுக்கல் சரகம், அவர்கள் போடி மெட்டு மாநில எல்லைச் சோதனைச் சாவடியை ஆய்வு செய்தார். அப்போது, வாகனங்களை முறையாகச் சோதனை செய்வது மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களின் நகர்வை தீவிரமாக கண்காணிப்பது குறித்து தேவையான வழிமுறைகள் வழங்கப்பட்டன.

மேலும், தேர்தல் நடத்தை விதிமுறைகள் (MCC) கடுமையாக அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. FST மற்றும் SST குழுக்களின் செயல்பாடுகளும் ஆய்வு செய்யப்பட்டன.

பாதுகாப்பு பணிக்காக ADSP, DSP, ஆய்வாளர்கள் மற்றும் உள்ளூர் காவல்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கூடுதலாக, CAF மற்றும் SAP ஆகியவற்றின் தலா 2 கம்பெனிகள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளன.

மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் திமுக வேட்பாளர் அமுலு பொன்மலருக்கு

# காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் திமுக அரசின் சாதனை எடுத்துக்கூறி வாக்குசேகரிப்பு!



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் அவர்கள் மதுராந்தகம் ஒன்றியத்திற்குட்பட்ட பிலாப்பூர், மெய்யூர், மாமண்டூர், பழமத்தூர், குமாரவாடி, கருணாகரசேரி, நெல்லி, மங்கலம், நெல்வாய் உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் ஒன்றிய கழக செயலாளர் படாளம் சத்யசாய் தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர்.

அப்பொழுது வெற்றி வேட்பாளர் அமுலு பன்மலர் அவர்களுக்கு ஆரத்தி எடுத்தோம், மாலை அணிவித்தும், மலர் தூவி உற்சாக வரவேற்பளித்தனர். மதுராந்தகம் தொகுதி திமுக வேட்பாளர் அவர்கள் ஆதரித்து காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் செய்த மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம், காலை உணவு திட்டம், கலைஞர் கனவு இல்லம், மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை எடுத்துக் கூறி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் திமுக, கோகுல கண்ணன், மாலதி, நந்தினி கரிகாலன், செம்பருத்தி துர்கேஷ், உசேன் ராஜ்குமார், ஆனந்த கண்ணன் , விசிக, அன்புச்செல்வன், பேரறிவாளன், கலை கதிரவன் , எடிசன், முகிலன், ஜெயந்தி தனலட்சுமி காங்கிரஸ் கட்சி ராஜா கோவலன் கோட்டீஸ்வரன் சி பி ஐ எம் சேக்குவாரா தாஸ் ராஜா புக்கத்துறை கலைஞர் நகர் அம்பேத்கார் நகர் அன்பழகன் செல்வம் சக்திவேல் கிளை செயலாளர்கள் கணேசன் சீனிவாசன் ரவி சங்கர் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்

# தமிழ்நாடு சாம்போ அசோசியேஷனுக்கு மொத்த சாம்பியன் பட்டம்




ஹரித்வார், உத்தரகாண்ட்: பகுதியில் கடந்த மார்ச் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெற்ற SFI 16வது தேசிய சாம்போ சாம்பியன்ஷிப் 2025-26 போட்டியில் தமிழ்நாடு சாம்போ அசோசியேஷன் சிறப்பான சாதனை படைத்து மொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் தமிழ்நாடு அணி 20 தங்கப் பதக்கங்கள், 9 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 31 பதக்கங்களை வென்று முதலிடம் பிடித்தது. மொத்த சாம்பியன் கோப்பையை உத்தரகாண்ட் மாநில அமைச்சர் மாதன் கவுஷிக் , தமிழ்நாடு மாநில செயலாளர் டாக்டர் முகமது அனஸ் வழங்கினார்.



2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு காரைக்குடி சட்டமன்ற தொகுதி, காரைக்குடியில் அழகப்பர் நடையாளர் சங்கத்தில் காங்கிரஸ் கட்சியின் வெற்றி வேட்பாளர் எஸ்.மாங்குடி அவர்கள் பிரச்சாரம் செய்து கை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்கள்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (08.04.2026) ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல் குமரகுரு விவசாய கல்லூரியில் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்து நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கரும்பு கொண்டு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதை பார்வையிட்டார்.

## ஈரோடு கிழக்கில் 'கை' கொடுக்கும் அமைச்சரின் ஆதரவு: கோபிநாத் பழனியப்பன் இல்லம் தோறும் வாக்கு சேகரிப்பு



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் கோபிநாத் பழனியப்பன், நேற்று தனது தேர்தல் பிரச்சாரத்தைப் பெரும் எழுச்சியுடன் தொடங்கினார்.

நேற்று 08.04.2026 காலை 7 மணியளவில், பெரியார் நகரில் உள்ள அமைச்சர் முகாம் அலுவலகத்தில் இருந்து பிரச்சாரம் புறப்பட்டது. திமுக தெற்கு மாவட்ட செயலாளரும், தமிழக அமைச்சருமான சு.முத்துசாமி , தேர்தல் துண்டறிக்கைகளை வழங்கி பிரச்சாரத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார். வீடு வீடாகச் சென்ற வேட்பாளர் அமைச்சரின் வாழ்த்துகளைப் பெற்றுப் புறப்பட்ட வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன், பெரியார் நகர் முழுவதிலும், அதனைத் தொடர்ந்து எஸ்.கே.சி. ரோடு,

ராஜா காடு,வாமலை வீதி

ஆகிய பகுதிகளில் ஒரு வீடு கூடத் தவறாமல் மக்களை நேரடியாகச் சந்தித்து கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

எதிரொலித்த 'திராவிட மாடல் 2.0' முழக்கம்

பிரச்சாரத்தின் போது திமுக,காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டனர்.

தற்போது நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளையும், இனி வரவிருக்கும் 'திராவிட மாடல் 2.0' திட்டங்களையும் மக்களிடம் விளக்கிக் கூறினர். பிரச்சாரக் களம் முழு வதும் தற்போது தமிழகத்தில் ட்ரெண்டிங்கில் உள்ள " ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்

என்ற தேர்தல் பாடலைத் தொண்டர்கள் உற்சாகமாகப் பாடி, ஒரு திருவிழாக் கோலமாக மாற்றினர்.

### தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா

## இராட்சத பலூனை வானில் பறக்கவிட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு




ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் இராட்சத பலூனை வானில் பறக்கவிட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் நேற்று (08.04.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் இராட்சத பலூனை வானில் பறக்கவிட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்திய தேர்தல் ஆணையம், வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்ய வேண்டும், வாக்காளர்கள் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கையெழுத்து இயக்கம், செல்பி பாய்ண்ட் மூலமாகவும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, நேற்றைய தினம் (08.04.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் "வாருங்கள் 100 சதவீதம் வாக்களிப்போம்", "என் வாக்கு என் உரிமை" என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்த 10 அடி சுற்றளவு மற்றும் 10 அடி உயரம் கொண்ட ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட இராட்சத பலூனை வானில் 150 அடி உயரத்தில் பறக்க விட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

தொடர்ந்து, 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்

இந்நிகழ்வுகளில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, உதவி ஆணையாளர் (மண்டலம்-1) மோகனசுந்தரி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (08.04.2026) ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்து நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்று விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் / ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்து அலுவலர் அர்பித்ஜெயின் உட்பட பலர் உள்ளனர்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (08.04.2026) ஈரோடு மாவட்டம், ஜம்பை தொடக்க மற்றும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தின் சார்பில் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்து நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தேர்தல் விழிப்புணர்வு குறித்த வாசகங்கள் அச்சிடப்பட்ட கைகுட்டையினை பார்வையிட்டார்.



தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் அலுவலகத்திற்கு வருகை புரிந்த தமிழக வெற்றிக்கழக ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் விஜய் பாலாஜி, மாநிலத்தலைவர் எல்.கே.எம்.சுரேஷ், மாநில பொருளாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் ஈரோடு விசைத்தறி உரிமையாளர்கள் சங்க செயலாளர் ராசு (எ) பழனிசாமி ஆகியோர்களிடம் தமக்கு ஆதரவு தரக்கோரி கேட்டுக் கொண்டார். இதில் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு விசைத்தறி சம்பந்தமான கோரிக்கை மனுவை வழங்கினர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (08.04.2026) ஈரோடு மாவட்டம், ஜம்பை தொடக்க மற்றும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தின் சார்பில் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்து நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஜமக்காளத்தில் கைக்கோர்வை முறையில் வாக்குப்பதிவு குறித்த சின்னம் நெசவு செய்யப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்திய நெசவாளர்களை கௌரவித்தார்.

## UAE intercepts fresh batch of missiles, first ships pass through Hormuz after truce

*US Iran war LIVE updates: Maria Zakharova, Russia's foreign ministry spokeswoman, said the US and Israel carried out "a one-track aggressive unprovoked attack" on Iran, which resulted in a "crushing defeat". Meanwhile, India's external affairs ministry said in a statement that New Delhi welcomes the ceasefire agreement. US, Iran accept ceasefire; White House says Israel agrees*



*The United States and Iran reached a two-week ceasefire on Tuesday, less than an hour before Trump's deadline to strike Iran was due to end. As part of the agreement, Tehran agreed to reopen the crucial Strait of Hormuz for a limited period.*

*The White House said Israel had also agreed to the ceasefire. The last-minute deal came after Trump said he had spoken to Pakistan's leadership, who had called for a pause in hostilities.*

*macy are essential to bring an early end to the ongoing conflict."*

*Talks to begin Friday in Islamabad*

*Iran described the ceasefire as a success and said it would hold talks with Washington starting Friday in Pakistan, as part of efforts to end the conflict.*

*Pakistan Prime Minister Shehbaz Sharif, who acted as a mediator, said Islamabad would host delegations from both countries for negotiations aimed at reaching a "conclusive agreement."*

*Israel is still attacking Iran, military official says*

*A military official said early Wednesday that Israel was continuing its attacks on Iran.*

*The official, who spoke on condition of anonymity as per regulations, made the statement shortly after the White House said Israel had agreed to the terms of the two-week US-Iran ceasefire agreement.*

*Iraq's Islamic Resistance says suspending operations for two weeks*

*The Islamic Resistance in Iraq, a coalition of Iran-backed armed groups, said it would halt its operations in Iraq and other areas for two weeks, according to a statement issued on Wednesday. The move follows the announcement of a two-week pause in hostilities between the United States and Iran.*



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் எம்.யுவராஜாவை அவரது அலுவலகத்திற்கு நேரில் சென்று தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் எல்.கே.எம்.சுரேஷ், மாநில பொருளாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் ஈரோடு விசைத்தறி உரிமையாளர்கள் சங்க செயலாளர் ராசு (எ) பழனிசாமி ஆகியோர்கள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.